**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் – பேராசிரியர் டாக்டர் எஸ்.வி. சிட்டிபாபு தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் படி மெட்ரிகுலேஷன்/மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு குறித்து ஆணை வெளியிடப்பட்டது – பள்ளிகளுக்கு குறைந்தபட்ச நிலப்பரப்பு நிர்ணயம் தொடர்பாக திருத்தம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (எக்ஸ்.2) துறை

அரசாணை (2D) எண். 24

நாள். 23.4.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
சித்திரை 10
படிக்கப்பட்டவை

1. அரசாணை (2D) எண். 48 பள்ளிக் கல்வித் துறை நாள். 21.7.2004
2. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 1005/அ1/2010, நாள். 17.3.2010

**ஆணை:-**

மேலே 1-ல் படிக்கப்பட்ட அரசாணை (2D) எண். 48 பள்ளிக் கல்வித் துறை நாள். 21.7.2004-ல் மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகட்கு அங்கீகாரம் வழங்குவதற்கு தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை வரையறுத்து ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வரசாணையில் பள்ளிகட்கான குறைந்தபட்ச நிலப்பரப்பினை பொறுத்தவரை பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகளின் தன்மைக்கேற்ப பரப்பளவு கீழ்க்குறிக்கப்பட்டவாறு நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாநகராட்சி பகுதி | : | 6 மனையிடம் | (grounds) |
| மாவட்டத் தலைநகரம் | : | 8 மனையிடம் | (grounds) |
| நகராட்சி | : | 10 மனையிடம் | (grounds) |
| பேரூராட்சி | : | 1 ஏக்கர் | (acre) |
| ஊராட்சிப் பகுதி | : | 3 ஏக்கர் | (acres) |

மேலும் மேற்குறித்தவாறு நிலப்பரப்பிற்கான குறைந்தபட்ச தேவையைப் பூர்த்தி செய்யாத பள்ளி நிர்வாகங்களுக்கு நிலத்திற்கான விலை மிக உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு மேற்படி நிபந்தனையை நிறைவேற்ற மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் கால அவகாசமும் மேற்காணும் அரசாணையில் அளிக்கப்பட்டுள்ளது.

2. அரசாணை (நிலை) எண். 238 பள்ளிக் கல்வித் துறை நாள். 26.11.2008-ல் பல மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி நிர்வாகங்கள் குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையை இன்னும் பூர்த்தி செய்யாததாலும் மேற்காணும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வி நலன் மற்றும் பள்ளி நிர்வாகங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள ஒருசில காரணங்களை கருத்தில் கொண்டு ஏற்கனவே துறை அனுமதி/அங்கீகாரம் பெற்று தொடர்ந்து செயல்பட்டுவரும் பழைய மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி நிர்வாகங்கட்கு குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையை பூர்த்தி செய்ய ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்ற நிலையில் மேலும் மூன்றாண்டுகட்கு கால அவகாசம் அளித்து ஆணை வழங்கப்பட்டது.

3. மேலே 2-ல் படிக்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:- மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது குறித்து விரிவான ஆணைகள்

வழங்கப்பட்டுள்ளன என்றும் அவ்வரசாணையில் பள்ளிகளுக்கு குறைந்தபட்ச நிலம் ஏற்படுத்துவது குறித்து Land Area என்ற தலைப்பில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இக்குறைந்தபட்ச நிலம் ஒரே இடத்தில் அமைந்தால் மட்டுமே பள்ளி சுமூகமாக நடைபெற வாய்ப்பு உள்ளது. வெவ்வேறு இடங்களில் செயல்படும் பட்சத்தில் மாணவர்கள் கல்வி நலனும் பாதுகாப்பும் பாதிக்க வாய்ப்பு உள்ளது. எனவே புதிய பள்ளிகள் அனுமதி வழங்கும்பொழுது பள்ளிக்கான குறைந்தபட்ச நிலம் ஒரே இடத்தில் அமையவேண்டும் எனக் கருதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்றும் ஆனால் அரசாணையில் குறைந்தபட்ச நிலம் ஒரே இடத்தில் அமையவேண்டுமென எதும் குறிப்பிடப்படவில்லை. எனவே, ஒரே அமைவிடத்தில் அமையாத பள்ளிகளுக்கு தொடக்க அனுமதி வழங்க நிராகரிப்பு செய்யும்போது நீதிமன்ற வழக்குகள் போன்ற பல்வேறு நிர்வாகப் பிரச்சனைகள் ஏற்படுகின்றது. இதனால் அரசாணையின்படி கருத்துருக்களை பரிசீலித்து ஆணை வழங்க இயலாத நிலை உள்ளது என்றும் இந்நிலையினை தவிர்க்கவும், மாணவர்கள் கல்வி நலன் மற்றும் பாதுகாப்பு ஆகிய அம்சங்களை உறுதிசெய்யவும், பள்ளிக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச நிலம் ஒரே இடத்தில் அமைந்தால் மட்டுமே சாத்தியமாகும் என்பதால் அரசாணை (2D) எண். 48நாள். 21.7.2004-ல் "Land Area" என்ற தலைப்பில் உள்ள பகுதிக்கு உரிய திருத்தம் செய்து ஆணையிடுமாறும் இத்திருத்தம் மேற்படி அரசாணை வெளியிட்ட நாள். 21.7.2004 முதல் முன் தேதியிட்டு வழங்குமாறு அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 3-ல் உள்ள மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு ஆய்ந்து பரிசீலனை செய்து அதனை ஏற்கலாம் எனக் கருதி அவ்வாறே அரசாணை (2D) எண். 48, பள்ளிக் கல்வித் துறை நாள். 21.7.2004-க்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது. இது மேற்கண்ட அரசாணை வெளியிட்ட நாளான 21.07.2004 முதல் அமல்படுத்தப்படுகிறது.

| அரசாணை (நிலை) (2D) எண். 48 பள்ளிக் கல்வித் துறை நாள் 21.7.2004-இல் குறிப்பிடப்பட்டது | | திருத்தப்பட்டது | |
|---|---|---|---|
| LAND AREA | | LAND AREA | |
| Corporation | 6 Grounds | Corporation | 6 grounds composite land. |
| District Head quarters | 8 Grounds | District Head quarters | 8 grounds composite land. |
| Municipality | 10 Grounds | Municipality | 10 grounds composite land. |
| Township | 1 acre | Township | 1 acre composite land |
| Rural | 3 acres | Rural | 3 acres composite land. |

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.
தொடக்கப் பள்ளி இயக்குநர், சென்னை-6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
நகல்
பள்ளிக் கல்வி அமைச்சரின் முதுநிலை உதவியாளர்
சென்னை-9.
பள்ளிக் கல்வி (டி இ1பி) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 23/4/2010

28/4/10